செய்தி வெளியீடு எண்: 340 நாள்: 22.05.2018

# செய்தி வெளியீடு

## அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேவூர் திரு.எஸ்.இராமசந்திரன் அவர்கள் அன்னதானத் திட்டம் குறித்து ஆய்வு

இன்று (22.05.2018) சென்னை, அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேவூர் திரு.எஸ்.இராமசந்திரன் அவர்கள் அன்னதானத் திட்டம் செயல்படுவது குறித்து திருக்கோயில் வளாகத்தில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மேனாள் முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்த திட்டமான திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள 754 திருக்கோயில்களில் சிறப்பாக நடைபெற்று வரும் இந்த திட்டம், தொடங்கப்பட்ட அனைத்து திருக்கோயில்களிலும் தொய்வின்றி நடைபெற்று வருவதை கண்காணித்திட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்று அமைச்சர் தெரிவித்தார்.

சென்னை, அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் ஒவ்வொரு நாளும் தலா 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. மேலும், 1கிருத்திகை நாளில் மட்டும் 500 நபர்களுக்கு இத்திருக்கோயிலில் சிறப்பாக அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது என்று ஆய்வின்போது அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது தியாகராய நகர், சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.சத்யா அவர்கள், சென்னை மண்டல இணை ஆணையர் திரு.சி.லட்சுமணன் அவர்கள், அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலின் இணை ஆணையர் மற்றும் துணை ஆணையர்/செயல் அலுவலர்(கூ.பொ) திருமதி.இரா.வான்மதி அவர்கள், சென்னை மண்டல உதவி ஆணையர் திரு.மொ.அன்னக்கொடி அவர்கள் ஆகியோர் உடனிருந்தார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9